


**14. 08. 2025**

**தலைப்பு செய்திகள்**

- **நாட்டின் 79-வது சுதந்திர தினத்தை ஒட்டி குடியரசு தலைவர்** திருமதி திரௌபதி முர்மு நாட்டுமக்களிடையே இன்றிரவு 7 மணிக்கு உரையாற்றுகிறார்.
- **2047-ம் ஆண்டு இந்தியா வல்லரசு நாடாக** உருவெடுக்கும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர். எல்.முருகன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
- **நம் கலாச்சாரத்தை வலுப்படுத்த தாய்மொழி கல்வி இன்றியமையா** பங்காற்றுவதாக மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.
- **தமிழகத்தில் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை** சார்பில் 37 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.
- **தூய்மை பணியாளர்களுக்கு தனிமருத்துவ திட்டம்,** குடியிருப்புகள் உள்ளிட்ட 6 சிறப்புத்திட்டங்கள் செயல் படுத்தப்படும் என்று மாநில நிதியமைச்சர் திரு. தங்கம்தென்னரசு அறிவித்துள்ளார்.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖

**சுதந்திர தினம் - குடியரசு தினம்**

**நாட்டின் 79-வது சுதந்திர தினத்தை ஒட்டி குடியரசுதலைவர்** திருமதி திரௌபதி முர்மு நாட்டுமக்களிடையே இன்றிரவு 7 மணிக்கு உரையாற்றுகிறார்.

ஆகாஷவாணி, தூர்தர்ஷன் அலைவரிசைகளில் இது நேரடி ஒலி, ஒளிபரப்பப்படும்.

குடியரசுதலைவர் உரையின் தமிழாக்கம் இன்றிரவு ஒன்பதரை மணிக்கு ஆகாஷவாணியில் ஒலிபரப்பாகும்.

❖❖❖❖❖❖❖

## பிரதமர்

**பிரதமர் திரு.நரேந்திரமோடி சுதந்திரதினத்தை ஒட்டி டெல்லி** செங்கோட்டையில் நாளை தேசிய கொடியை ஏற்றிவைத்து நாட்டுமக்களிடையே உரையாற்றுகிறார்.

2047-ம் ஆண்டு வளர்ச்சியடைந்த பாரத பாதையில் அரசின் தொலைநோக்கு பார்வையுடன் தேசம் எழுச்சியுடன் முன்னேறி செல்லும் நிலையில், புதிய பாரதம் என்ற கருப்பொருளுடன் சுதந்திர தின கொண்டாட்டங்கள் இடம்பெறுகின்றன.

வளமான, பாதுகாப்பான, துணிச்சலான வீரமிகு புதிய பாரத எழுச்சியை பிரதிபலிக்கும் வகையிலும், தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் முன்னெடுத்துச்செல்லும் வகையிலும் இந்த ஆண்டு சுதந்திர தின கொண்டாட்டங்கள் இடம்பெறுகின்றன.

79-வது சுதந்திர தினத்தை ஒட்டி தலைநகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

அதிநவீன **CCTV** கேமரா மூலம் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

தில்லி வான் பகுதியில் நாளைமறுநாள் வரை ட்ரோன்கள், பலூன்கள் பறக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு துறைகளைச் சேர்ந்த 5 ஆயிரம் சிறப்பு விருந்தினர்கள் சுதந்திர தின கொண்டாட்டங்களை பார்வையிடுகின்றனர்.

❖❖❖❖❖❖❖

## உள்துறை அமைச்சகம்

**சுதந்திர தினத்தை ஒட்டி 2025-ம் ஆண்டிற்கான** குடியரசு தலைவர் விருதுகளுக்கு காவல்துறை, தீயணைப்பு, ஊர்க்காவல்படை, சீர்த்திருத்தப் பணிகள் உள்ளிட்ட துறைகளை சேர்ந்த ஆயிரத்து 90 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

233 பணியாளர்களுக்கு வீர தீர செயல்பதக்கமும், 99 பேருக்கு சிறப்பு சேவைக்கான குடியரசு தலைவர் பதக்கமும், 758 பணியாளர்களுக்கு சிறப்பான சேவை பதக்கமும் வழங்கப்படும் என அமைச்சகம் கூறியுள்ளது. தமிழக காவல்துறையை சேர்ந்த 21 அதிகாரிகள் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

## முதலமைச்சர் - சுதந்திர தினம்

சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் நாளை நடைபெறும் சுதந்திர தின விழாவில் **முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின்** தேசிய கொடியை ஏற்றிவைத்து உரையாற்றுகிறார்.

பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தோருக்கு விருதுகளையும், பதக்கங்களையும் முதலமைச்சர் வழங்கவுள்ளார்.

சிறப்பாக செயல்பட்ட ஆவடி, நாமக்கல் மாநகராட்சிகள், ராமேஸ்வரம், ராஜபாளையம், பெரம்பலூர் நகராட்சிகளுக்கு பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

விழாவை ஒட்டி அப்பகுதி முழுவதும் காவல் துறையினரின் 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் விமான நிலையங்கள், ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள் உட்பட மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழகத்தின் அனைத்து ஊராட்சிகளிலும் கிராமசபை கூட்டம் நாளை நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖

**எல்.முருகன்**

**2047-ம் ஆண்டு இந்தியா வல்லரசு நாடாக உருவெடுக்கும் என்று** மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர்.எல்.முருகன் தெரிவித்துள்ளார்

சென்னை அருகே ஆவடியில் இல்லந்தோறும் மூவாண் தேசியகொடி ஏற்றுவதை வலியுறுத்தும் பேரணியை இன்று தொடங்கிவைத்து பேசிய அமைச்சர், பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் கட்டமைப்பு, பொருளாதாரம், அதிகாரமய மேம்பாட்டிற்காக உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளில் மத்திய அரசின் பல திட்டங்களால் தமிழகம் பெரிதும் பயனடைந்திருப்பதாக அவர் கூறினார்.

சாலை, ரயில், விமான போக்குவரத்துகள் விரிவுப்படுத்தப்பட்டு வந்தே பாரத் அதிநவீன ரயில் சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

உள்நாட்டு பொருள் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான பிரதமரின் தொலைநோக்கு பார்வையால் **ஒருமாவட்டம், ஒரு உற்பத்தி பொருள்** திட்டத்தின் கீழ் உள்ளூர் பொருட்கள் உலக அரங்கிற்கு எடுத்துச்செல்லப்பட்டிருப்பதாக கூறினார்.

.. **வாய்ஸ்** ..

தேச ஒற்றுமையை வலுப்படுத்துவற்காகவும், சுதந்திர போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் அனைவரும் தமது இல்லங்களில் தேசிய கொடியை ஏற்ற அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

சென்னை ராயபுரத்தில் இன்று பிற்பகல் அமைச்சர் தலைமையில் இல்லந்தோறும் மூவர்ண தேசிய கொடி பேரணி நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖

**மூவர்ணகொடி மாவட்டங்கள்**

**தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் இல்லந்தோறும்** மூவர்ண தேசியகொடி விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

காஞ்சிபுரம், நாமக்கல் அஞ்சல்கோட்டம் சார்பில் நடைபெற்ற பேரணியில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

சேலம் மாவட்டம் மேட்டூரில் பி.ஜே.பி. சார்பில் 100 அடி நீளமுள்ள தேசியகொடி பேரணி அணிவகுப்பு இன்று நடைபெற்றது.

விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் தயாரிக்கப்படும் தேசியகொடி விற்பனை களைகட்டியுள்ள நிலையில், இவற்றை உற்பத்தி செய்யும் திரு. காசிராஜன் சுற்றுச்சூழலுக்கு உகந்த கொடிகள் உருவாக்கப்படுவதாக எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்

.. **வாய்ஸ்** ..

தேசிய கொடியை தயாரிப்பதில் பெருமை கொள்வதாக காஞ்சிபுரத்தை சேர்ந்த மகளிர் சுயஉதவிக்குழுவை சார்ந்த பெண் ஒருவர் தெரிவித்தார்

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖

**அம்ரித் உதயான்**

**குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு** அம்ரித் உதயான் கோடை ஆண்டு விழாவை குடியரசு தலைவர் மாளிகையில் இன்றுகாலை தொடங்கி வைத்தார்.

பொதுமக்கள் வரும் சனிக்கிழமை முதல் அடுத்த மாதம் 14-ம் தேதிவரை இந்த பூந்தோட்டத்தை காலை 10 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பார்வையிட வகை செய்யப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

**தர்மேந்திர பிரதான்**

**தேசிய புதிய கல்விக்கொள்கையில்** தொடக்க பள்ளிகளில் தாய்மொழி அடிப்படையிலான கல்வித்திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் என்று மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

ஒடிஷா மாநிலம் பூரியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், கலாச்சாரத்தை வலுப்படுத்தி முன்னெடுத்து செல்ல தொடக்க கல்வி தாய்மொழியிலேயே பயிற்றுவிக்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டுமென்றார்.

❖❖❖❖❖❖❖

உச்சநீதிமன்றம்

தலைநகர் டெல்லியில் உள்ள தெரு நாய்களை அகற்றி, காப்பங்களில் வைப்பதற்கான இருவர் நீதிமன்ற உத்தரவை, உச்சநீதிமன்றம் இன்று ஒத்திவைத்துள்ளது.

இரு நீதிபதிகள் தீர்ப்பிற்கு தடைவிதிக்க கோரி தாக்கல்செய்த மனுக்களை இன்று விசாரித்த 3 நீதிபதிகள் அமர்வு இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

தெரு நாய்கள் காப்பகங்களில் வைக்கப்பட வேண்டும் என்று நீதிபதி பர்திவாலா, ஆர். மகாதேவன் அடங்கிய அமர்வு கடந்த 11-ம் தேதி உத்தரவு பிறப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழகத்தில் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் 37 கோடியே 38 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் காணொலி மூலம் இன்று திறந்துவைத்தார்.

இதன்படி புதுக்கோட்டை, திருப்பத்தூர், திருப்பூர் மாவட்டங்களில் 9 கோடி ரூபாய் செலவில், சிறு விளையாட்டு அரங்கங்கள் திறக்கப்பட்டுள்ளன.

சென்னை, திருச்சி, மதுரை, கடலூர், திருநெல்வேலியில் 6 கோடியே 38 லட்சம் ரூபாய் செலவில் 5 பாரா விளையாட்டு மைதானங்கள்,

தென்காசி மாவட்டத்தில் 15 கோடி ரூபாய் செலவில் மாவட்ட விளையாட்டு வளாகம்,

கோவில்பட்டியில் 7 கோடி ரூபாய் மதிப்பில் ஹாக்கி வீரர்களுக்கான முதன்மை நிலை மையம் ஆகியவை இதில் அடங்கும்.

சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை தொடங்கிவைத்த முதலமைச்சர், விபத்து மற்றும் இயற்கை மரணமடைந்த அரசு ஊழியர் குடும்பத்தினருக்கு விபத்து மற்றும் ஆயுள்காப்பீட்டு தொகை, திருமணம் மற்றும் உயர்கல்வி உதவித்தொகைக்கான காசோலைகளை முதலமைச்சர் வழங்கினார்.

தொடர்ந்து செங்கல்பட்டு மாவட்டத்தில் 700 கோடி ரூபாய் முதலீட்டில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வேலைவாய்ப்பு பெறும் வகையில் புதிய ஆலை அமைக்கும் வகையில் ஜப்பான் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் முன்னிலையில் இன்று கையெழுத்தானது.

❖❖❖❖❖❖❖

**தமிழக அமைச்சரவை கூட்டம்**

**தமிழ்நாட்டில் தூய்மை பணியாளர்களுக்கு** 6 **புதிய** சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.

**முதலமைச்சர்** தலைமையில் சென்னையில் இன்றுநடைபெற்ற அமைச்சரவை கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களிடம் பேசியஅவர், தூய்மை பணியாளர்களுக்கு சிகிச்சை அளிக்க தனித்திட்டம், அவர்களின் குழந்தைகளுக்கு உயர்கல்வி, 30 ஆயிரம் குடியிருப்புகள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் இலவச காலை உணவு திட்டம் உள்ளிட்டவை செயல்படுத்தப்பட உள்ளதாக கூறினார்.

தூய்மை பணியாளர்கள் அனைவரும் வேலை நிறுத்தத்தை கைவிட்டு பணிக்கு திரும்ப வேண்டுமென அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

.. **வாய்ஸ்** ..

இந்த அமைச்சரவை கூட்டத்தில் புதிய தொழில்முதலீட்டு திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குவது உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖

**வானிலை**

**வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக நீலகிரி,** கோவை மாவட்ட மலைப்பகுதியில் இன்று கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

தென் மற்றும் வட தமிழககடலோர பகுதிகள், தென்மேற்கு வங்கக்கடல் மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில்பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் வரும் 18-ம் தேதி வரை இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

**இருவரி**

**சிவகங்கை மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக்** பொருட்களை பயன்படுத்தாத உணவகங்கள் அரசின் விருதுகளை பெற வரும் 5-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி. பொற்கொடி தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**துனிஷியாவில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் மகளிர்** ஒற்றையர் காலிறுதியில் இந்தியாவின் தனிஷா கஷ்யப் - இத்தாலியின் மெடலனாவை இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖